# 09-05-2024 செய்தி

## கோவிஷீல்டு தடுப்பூசி சர்வதேச அளவில் வாபஸ்

- பிரிட்டனைச் சேர்ந்த பிரபல மருந்து தயாரிப்பு நிறுவனமான அஸ்ட்ராசெனகா வர்த்தக காரணங்களுக்காக தனது கரோனா தடுப்பூசியை (கோவிஷீல்டு) சர்வதேச அளவில் அனைத்து நாடுகளில் இருந்தும் திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளது.
- கரோனா பரவலின்போது இந்தியாவில் இந்த நிறுவனத்தின் கோவிஷீல்டு தடுப்பூசிதான் அதிகம் பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.
- இந்தியாவில் சீரம் நிறுவனம் இந்தத் தடுப்பூசியை தயாரித்து விற்பனை செய்தது.
- கோவிஷீல்டு தடுப்பூசியால் மிக அரிதான பக்கவிளைவாக ரத்தம் உறைதல் ஏற்படலாம் என்று லண்டன் உயர்நீதிமன்றத்தில் அஸ்ட்ரா செனா ஒப்புக் கொண்ட தகவல் கடந்த வாரம் வெளியானது.
- இந்நிலையில், அந்த தடுப்பூசியை திரும்பப் பெறுவதாக அஸ்ட்ராசெனகா வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.
- கரோனா திரிபுகளுக்கு ஏற்ப தடுப்பூசிகளின் தேவை மாறியுள்ளது. சந்தையில் மேம்படுத்தப்பட்ட தடுப்பூசிகள் மிகுதியாக கிடைக்கப் பெறுவதால் எங்கள் தயாரிப்பை திரும்பப் பெறுகிறோம் என அந்நிறுவனம் கூறியுள்ளது.
- ஐரோப்பிய மருத்துவ ஆணையம், அஸ்ட்ராசெனகா நிறுவனத்தின் கரோனா தடுப்பூசியை (இந்தியாவில் கோவிஷீல்டு) தங்கள் யூனியனில் உள்ள 27 நாடுகளும் பயன்படுத்த வேண்டாம் என்று அறிவித்துள்ளது.
- லண்டன் உயர்நீதிமன்றத்தில் தடுப்பூசி தொடர்பான வழக்கில் கடந்த பிப்ரவரி மாதம் அஸ்ட்ரா செனகா நிறுவனம் தாக்கல் செய்த அறிக்கை தி டெய்லி டெலிகிராப் பத்திரிகையில் அண்மையில் வெளியானது. அதில், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்ட கரோனா தடுப்பூசியால் (கோவிஷீல்டு) மிகவும் அரிதான பக்க விளைவாக ரத்தம் உறைதல் ஏற்படலாம்.

## தாயகத்துக்கு ரூ.9 லட்சம் கோடி: இந்தியர்கள் உலக சாதனை

- 2022-ஆம் ஆண்டு வெளிநாடுகளில் இருந்து தாயகத்துக்கு 111.22 பில்லியன் டாலர்கள் (சுமார் ரூ. 9.16 லட்சம் கோடி) அனுப்பி, உலக அளவில் இந்தியர்கள் சாதனை படைத்துள்ளனர்.
- ஐ.நா.வின் அங்கமான சர்வதேச புலம்பெயர்வு அமைப்பு உலக புலம் பெயர்வு அறிக்கை 2024ல் வெளியிட்டது.
- இந்த அறிக்கையின்படி, வெளிநாடுகளில் வசித்தும் பணியாற்றியும் வரும் இந்தியர்கள், இந்தியாவில் உள்ள தங்கள் குடும்பத்தினருக்கு 2022-ஆம் ஆண்டு 111.22 பில்லியன் டாலர்கள் (சுமார் ரூ. 9.26 லட்சம் கோடி) அனுப்பியுள்ளனர்.
- 2022-ல் வெளிநாடுகளில் உள்ள தமது குடிமக்களிடம் இருந்து அதிக தொகை பெற்ற முதல் 10 நாடுகள்

| நாடுகள் | தொகை (இந்திய மதிப்பில்) |
|---|---|
| இந்தியா | 111.22 பில்லியன் டாலர் (ரூ. 9.28 லட்சம் கோடி) |
| மெக்ஸிகோ | 61.10 பில்லியன் டாலர் (ரூ. 5.10 லட்சம் கோடி) |
| சீனா | 51 பில்லியன் டாலர் (ரூ. 4.25 லட்சம் கோடி) |
| பிலிப்பின்ஸ் | 38.05 பில்லியன் டாலர் (ரூ. 3.17 லட்சம் கோடி) |
| பிரான்ஸ் | 30.04 பில்லியன் டாலர் (ரூ. 2.50 லட்சம் கோடி) |
| பிரான்ஸ் | 29.87பில்லியன் டாலர் (ரூ. 2.49 லட்சம் கோடி) |
| பாகிஸ்தான் | 28.33 பில்லியன் டாலர் (ரூ. 2.36 லட்சம் கோடி) |
| எகிப்து | 21.50 பில்லியன் டாலர் (ரூ. 1.79 லட்சம் கோடி) |
| வங்கதேசம் | 20.13 பில்லியன் டாலர் (ரூ.1.68 லட்சம் கோடி) |
| நைஜியா | 20.13 பில்லியன் டாலர் (ரூ. 1.68 லட்சம் கோடி) |
| ஜெர்மனி | 19.29 பில்லியன் டாலர் (ரூ. 1.61 லட்சம் கோடி) |

## இந்தியா மூன்றாவது பெரிய சூரிய சக்தி உற்பத்தியாளர்

- 2023 ஆம் ஆண்டில், இந்தியா ஜப்பானை முந்தி உலகின் மூன்றாவது அதிக சூரிய சக்தி உற்பத்தி செய்யும் நாடாக மாறியது என்று சர்வதேச எரிசக்தி பகுப்பாய்வு நிறுவனமான எம்பர் தெரிவித்துள்ளது.
- ஜப்பானின் 110 BU உடன் ஒப்பிடும்போது 2023 இல் இந்தியா 113 பில்லியன் யூனிட் (BU) சூரிய சக்தியை உருவாக்கியது.
- நிறுவப்பட்ட ஆற்றல் திறன் அடிப்படையில், இந்தியா உலகில் ஐந்தாவது இடத்தில் உள்ளது.
- உலகின் முன்னணி சூரிய சக்தி உற்பத்தியாளர் சீனா ஆகும், இது 2023 இல் 584 BU சூரிய சக்தியை உற்பத்தி செய்தது.
- இருப்பினும், உலகளவில், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்கள் உலகளாவிய மின் உற்பத்தியில் 30% ஆகும்.
- அணுசக்தியுடன் இணைந்து, உலகம் 2023 இல் குறைந்த கார்பன் மூலங்களிலிருந்து கிட்டத்தட்ட 40% மின்சாரத்தை உற்பத்தி செய்தது.